[2022 ஏப்ரல் 25

165—

தொழிற்பேட்டை

***26669—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரியில் ஆட்டோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரியில் ஆட்டோ தொழிற்பேட்டை அமைக்கத் தற்பொழுது அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் எடப்பாடியார் ஐயா அவர்களை வணங்குகிறேன். சங்கரி தொகுதியில், சங்கரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 25,000 லாரிகள் இயக்கப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்வதானால், ஆந்திர மாநிலம், விஜயவாடா பகுதியில்* transport *நகர் ஒன்று அமைக்கப்பட்டு, அப்பகுதியில் அவர்களுக்குத் தேவையான* transport *சம்பந்தப்பட்ட அனைத்து சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சங்கரி தொகுதியிலும், 25,000 லாரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த இடத்திலே, அதுபோன்ற* transport *நகர் ஒன்று அமைத்துக் கொடுத்தால் பயனுள்ளதாக அமையும். அங்கு குடியிருப்புப் பகுதிகளும் இருப்பதால், மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படும் என்கின்ற காரணத்தினால்,* bit, bit *ஆக* mechanic shop, tinkering, welding, servicing, painting *போன்ற கடைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்தில் இருக்கின்றன. அக்கடைகள் பகல் நேரத்தில் மட்டுமே செயல்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. தற்போது சிப்காட் ஜவுளிப் பூங்கா எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதோ*

2022 ஏப்ரல் 25]

அதேபோன்று, ஓர் ஆட்டோ தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுத்தால், அந்த 25,000 லாரி தொழிலில் இருப்பவர்களது வாழ்வாதாரம் முன்னேறும் வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சங்கரி Lorry Owner's Association *சார்பாக, இந்தியாவிலே இருக்கக்கூடிய 50,000* petrol bunk*-களில், 25,000* I.O.C. petrol bunks *உள்ளன. அவையனைத்திலும்* sales*-ல்* No.*1 இடத்தில் இருந்தது சங்கரி* Lorry Owner's Association Bunk *தான். அந்த அளவிற்கு, அந்த* petrol bunk, award *மற்றும் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட* Association*-ன்* sales*-ல்* No.*1 ஆக இருந்த* petrol bunk *தற்போது விற்பனையில் 26-வது இடத்தில் வந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், 1 லிட்டர் டீசலின் விலை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு முக்கியமான கருத்தினை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் முக்கியமான கருத்தினைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினரது கருத்தினைக் கேட்பதற்குதான் இங்கு இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினரது கருத்திற்குப் பதில் சொல்வார்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திற்கும் நமது மாநிலத்திற்கும் டீசல் விலையில் ரூ.6/- வித்தியாசம் இருப்பதனால், டீசல் விற்பனையில் 1-வது இடத்தில் இருந்த* Bunk, *தற்போது 26-வது இடத்திற்குச் சென்றுவிட்டது. 2½ இலட்சம் லிட்டர் டீசல் விற்பனையாகிக் கொண்டிருந்த சங்கரி* Lorry Owner's Association Bunk*-ல், தற்போது 1 இலட்சத்து 10,000 லிட்டர் டீசல்தான் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. எனவே, அரசு அதன் விலையைக் குறைத்து நிர்ணயம் செய்தால் கட்டாயமாக நம்முடைய மாநிலத்தின் வருவாய் கூடும். எனவே, டீசல் விலையைக் குறைப்பார்களா என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

[*2022 ஏப்ரல் 25*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்து, சரியான கருத்து. இன்று சங்கரி தொகுதியில் இருக்கக்கூடிய தொழில் சூழ்நிலையை நானே பார்த்திருக்கிறேன்; நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள்கூட என்னிடத்தில் இது குறித்துப் பலமுறை கூறியிருக்கிறார்கள். அந்த நகரத்திற்குள்ளாகவே, ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உதாரணத்திற்கு* Mechanic shop *ஆக இருந்தாலும்* painting *ஆக இருந்தாலும்,* body building *ஆக இருந்தாலும் விசைத்தறிக் கூடங்களாக இருந்தாலும் அந்த ஊருக்குள்ளாகவே எல்லாம் அமைந்திருக்கக்கூடிய ஒரு நெருக்கடியான சூழ்நிலை அங்கு நிலவிகொண்டிருக்கிறது என்பது உண்மை.*

முற்பகல் 10—20

எனவே, ஊருக்கு வெளியே, சரியான வகையிலே நிலம் நமக்குக் கிடைக்கின்றபட்சத்திலே techno-economic feasibility study *நாம் செய்யலாம். அப்படிச் செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த வசதிகளையெல்லாம் செய்வதற்கு ஊருக்கு வெளியே ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறையினரிடமும் நான் கலந்துபேசி, அதற்கான வாய்ப்புகளை உருவாக்க நாம் முயற்சிக்கலாம். கேள்வியின் இரண்டாம் பாகத்திற்கான விடை தொடர்பாக, உங்களோடு சேர்ந்து நானும் நம்பிக்கையுடன் இருக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரியிலே* ICL-India Cements Limited factory *ஒன்று இருக்கிறது. அது 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. அந்த* cement factory *ஆரம்பிக்கும்பொழுது 1,500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தினார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் வேலைவாய்ப்பு செய்து தந்தார்கள். 5,000 பேர் அந்த* company-*ல் வேலை செய்தார்கள். இப்போது அவர்கள் எல்லோரும்* retirement

2022 ஏப்ரல் 25]

ஆகி வெளியில் வந்துவிட்டார்கள். 50 பேர் மட்டுமே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும், 500 லாரிகளுக்கு Association *அமைத்து, போக்குவரத்திற்கு, சிமென்ட் போன்ற மூலப்பொருட்கள் கொண்டு வருவதற்கான வாய்ப்புக் கொடுத்திருந்தார்கள். இப்போது 1–10–2021–லிருந்து 500 லாரிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்காமல் எடுத்துவிட்டு,* private lorry*–களைக் கொண்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வாழ்வாதாரம் எதுவும் இல்லை. முழுவதும்* North Indians*–ஐக் கொண்டுவந்து வைத்து, வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த 500 லாரிகளுக்கும் நம்முடைய அரசு முன்நின்று, அவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய* lorry owners *பிரச்சினைக் குறித்து என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள்.* India Cements Limited *என்பது ஒரு தனியார் நிறுவனம், அந்த நிறுவனம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, நீண்டகாலமாக,* loyal *ஆக, அந்த இடத்தில்* lorry owners *அவர்களுக்காகப் பணி செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் சூழ்நிலையில் அந்த நிறுவனம் தனிப்பட்ட முறையில்* company*–னுடைய* economics, *அவர்களுடைய பொருளாதார சூழ்நிலை,* competitiveness, *மற்றவர்களுக்கும் அவர்களுக்கும் இருக்கக்கூடிய* rates *வித்தியாசம் ஆகியவற்றையெல்லாம் கணக்கிலேகொண்டு,* company*–யினுடைய லாப, நஷ்ட கணக்கின் அடிப்படையிலே அந்த* company *ஒரு முடிவினை மேற்கொண்டு, மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கான ஒரு முயற்சியைச் செய்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அந்த* company*–யை நம்பி நீண்டகாலமாக தொழில் செய்து கொண்டிருக்கக்கூடியவர்கள் அதிலே இருக்கிறார்கள். உள்ளூர் தொழில் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதிலே உங்களைப்போல, அரசிற்கும் அக்கறை இருக்கிறது. எனவே, நாங்களும் அவர்களிடத்திலே ஓரளவிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 'நீங்கள் மற்றவர்களிடத்தில் கேட்டாலும்கூட, உள்ளூரிலே நீண்ட நெடுங்காலமாக உங்களை*

நம்பி தொழில் செய்யக்கூடியவர்களுடைய அந்தத் தொழில் பாதிக்காதவண்ணம் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் மீண்டும் உங்களுடைய சார்பில் நாங்களும் வலியுறுத்துவோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழ்நாடு முழுவதும், பல்லாயிரக்கணக்கான, இரு சக்கர, மூன்று சக்கர, நான்கு சக்கர வாகன பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் நகரிலே ஆங்காங்கே, கடைகளை வைத்து தொழில் செய்வதால், வாகன நெருக்கடி ஏற்பட்டு, போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் இருப்பதால், அவர்களுக்கு அரசு புறம்போக்கு நிலத்திலே தனியாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்து, அவர்கள் தனியாகத் தொழில் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* two-wheeler, auto repair *செய்கிற கடைகள் என்று பார்த்தோமென்றால், எல்லா ஊர்களிலும் தனித்தனியாக தொழிற்பேட்டை அமைக்க முடியாது. சங்கரிபோல், ஒரு* exceptions *இருக்கலாம். ஆனால் ஒவ்வோர் ஊரிலும் வைக்க முடியாது. ஏனென்றால், வாகனப் பெருக்கம் அதிகம்.* Two-wheeler population *மிக அதிகமாக இருக்கிறது. சில பகுதிகளில் நகரப் பகுதிகளுக்குள் இருந்தால்தான்,* repair *ஆகிவிட்டால்* immediate *ஆக பார்ப்பதற்கும் வசதியாக இருக்கும். எனவே, எந்தெந்த ஊர்களிலே மிக அதிகமான சூழ்நிலைகள் இருக்கிறதோ, அங்கு தொழில்பேட்டைகளுடைய தேவைகள் வருகின்றன. குறிப்பாக* Auto Industries develop *ஆகக்கூடிய அளவிற்கு இருந்தால்,*

2022 ஏப்ரல் 25]

அந்தச் சூழ்நிலைகளைக் கருத்திலேகொண்டு, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் அளித்ததைப்போல, அங்கே techno-economic feasibility-*யை* study *செய்து, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளின் அடிப்படையில்தான் அதுகுறித்து நாம் முடிவு செய்ய முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

துணை மின் நிலையம்

***9726—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், சோராஞ்சேரி பகுதியில் 110 K.V. *துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஒன்றியம், சோராஞ்சேரி பகுதியில் 110 KV *திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

முற்பகல் 10–25

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பரிசீலனையில் உள்ளது' என்று சொன்னமைக்காக,*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS